நீதித்துறை குற்றவியல் நீதிமன்றம், போளூர் திருவண்ணாமலை மாவட்டம்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

**STC 1/2017**

அ. சா. 1

| | |
|---|---|
| பெயர் | :: திரு. மகேந்திரன் |
| தகப்பனார் பெயர் | :: ச |
| ஊர் | :: தி |
| வட்டம் | :: தி |
| ஜாதி | :: செ |
| தொழில் | :: உ |
| மதம் | :: இந்து |
| வயது | :: |

1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள் 06.02.2019.

முதல் விசாரணை

நான் தற்போது சந்தவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடைபெற்ற தினமான 14.10.2016ம் தேதி நான் சந்தவாசல் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஆறுமுகம் மற்றும் மொழிவேந்தன் ஆகியோருடன் அன்று பகல் 1.00 மணிக்கு வீரகோயிலில் உள்ள எதிரி பழனி என்பவரின் வீட்டின் பின்புறம் சோதனை செய்து அங்கு அவர் பதுக்கி வைத்திருந்த சுமார் 2 பானைகளில் 30 லிட்டர் நாட்டுச்சாராயத்தை மொத்தமாக 60 லிட்டர் நாட்டுச்சாராயத்தை பதுக்கி வைத்திருந்ததை மகஜர் முன்னிலைக்கு கைப்பற்றினோம். மகஜரில் நான் சாட்சி கையழுத்து போட்டேன். அந்த மகஜர் அ.சா.ஆ.1 ஆகும். பின்பு மேற்படி சாராயத்தில் இரசாயன பரிசோதனைக்காக மாதிரி எடுத்துக்கொண்டு மீதம் இருந்ததை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்துவிட்டோம். பின்பு எதிரியை கைது செய்து நிலையம் கொண்டுவந்து வழக்கு பதிவு செய்து, திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு எதிரியை உட்படுத்தினோம். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். அது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

குற்ற செயல்கள் சம்மந்தமாக ரோந்து சென்றபோது கண்டுபிடித்தோம். அப்பொழுது அக்கம் பக்கம் யாரும் இல்லை. புள்ளி விவரத்திற்காக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால்
தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி,
சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

//ஒப்பம்//

திரு. ஏ.தாமோதரன், பிஎஸ்ஸி.,எம்.பி.எ.,எல்எல்எம்.,
நீதித்துறை நடுவர், போளூர்.